**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**

**கொழும்பு**

************

**ஊடக அறிக்கை**

இலங்கையில் மகாத்மா காந்தியின் 150 ஆவது

பிறந்த தின நினைவு கொண்டாட்டங்கள்

மகாத்மா காந்தியின் 150 ஆவது பிறந்த தின நினைவில் அவருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக கொழும்பில் உள்ள அலரிமாளிகையில் இன்று மகாத்மா காந்தியின் வெண்கல சிலை ஒன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் இந்திய தூதுவர் தரண்ஜித் சிங் சந்து ஆகியோர் திறந்துவைத்தனர் . 42 அங்குலமுடைய காந்தியின் தியான நிலை சிலையானது பத்ம பூஷண் விருது பெற்ற சிற்பியான ராம் வன்ஜி சுதரால் வடிவமைக்கப்பட்டுள்ளது. உலகின் மிகவும் உயரமான சிலையான சர்தார் வல்லபாய் பட்டேலின் (552 அடி உயரம் ) வெண்கலச்சிலையும் ராம் வன்ஜியால் வடிவமைக்கப்பட்டது.

இந்த நிகழ்வின்போது இலங்கை தபால் திணைக்களத்தால் வழங்கப்பட்ட மகாத்மா காந்தி நினைவு தபால் முத்திரைகள் இரண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் இந்திய தூதுவர் தரண்ஜித் சிங் சந்து ஆகியோரால் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது . இந்த நிகழ்வில் மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சர் ரவி கருணாநாயக்க, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் நவீன் திசாநாயக்க , தபால் சேவைகள் மற்றும் முஸ்லீம் மத விவகார அமைச்சர் எம் எச் ஏ ஹலீம் துறைமுகங்கள் , கப்பற்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்கா , பிரதி தபாலதிபர் நாயகம் இலங்கை தபால் திணைக்களம் டி ஏ ஆர் கே ரணசிங்கே மற்றும் முத்திரை திணைக்கள பணிப்பாளர் திரு எஸ் கே மீகாம ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதே வேளை இன்று மாலை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் சர்வதேச கற்கைகளுக்கான நிலைய கேட்போர் கூடத்தில் கௌரவ நீதியரசர் துரைராஜா ஜனாதிபதி சட்டத்தரணி அவர்கள் ' சமகாலங்களில் மகாத்மா காந்தியின் தொடர்புகள் ' என்ற தலைப்பில் மகாத்மா காந்தி நினைவு பேருரை நிகழ்த்தவுள்ளார். இந்நிகழ்வில் சபாநாயகர் கரு ஜயசூரியா மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்து ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் இலங்கை இந்திய சங்கத்தின் (SLIS) தலைவர் திரு ரொஹான் துடாவே SLIS முன்னாள் தலைவர் திரு குமார் நடேசன் SLIS செயலாளர் மற்றும் கலாசாரம் , கல்வித்துறை, தொழில்நிபுணர்கள் மற்றும் இலங்கை வர்த்தக வலையமைப்பை சேர்ந்தோர் பங்கேற்கவுள்ளனர்.

*****************

கொழும்பு

02 ஒக்டோபர் 2019